கள். ஆகவே மருத்துவர்களை நியமிக்கின்ற இடங்களில், கிராமப பகுதிகளில் அவர்கள் பணியாற்றத் தவறுவார்களானால் அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்து அரசுப் பணியிலிருந்து நீக்க வும் அரசாங்கம் தயங்காது என்பதை இந்த நேரத்தில் தெரிவித் துக் கொள்கிறேன்.

வாலாஜா அரசு மருத்துவமனை.

40—(*வினா எண் 9556) திரு. மா. கதிர்வேலு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாலாஜா அரசு மருத்துவமனையில் உள்ள ஆபரேசன் தியேட்டரும் படுக்கைகளைக் கொண்ட படுக்கைக் கட்டிடமும் பழுதடைந்து இடிந்துவிழும் நிலையில் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, (அ) மற்றும் (ஆ) இம் மருத்துவமனையில் பெண்கள் வார்டு ஒதுக்கப் பட்ட வார்டு (Isolation Word) கட்டிடங்கள் பழுதடைந் துள்ளன. ஒதுக்கப்பட்ட வார்டினை ரூ. 30,000 மதிப்பீட்டில் செப்பனிட, பொதுப்பணித் துறை நடவடிக்கை எடுத்துள்ளது. 28—7—1987 தேதியிட்ட மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அரசு ஆணை எண் 1443-ல் ரூ. 3.49 இலட்சம் மதிப்பீட்டில் 10 படுக்கைகள் கொண்ட மகப்பேறு பிரிவு கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திரு. மா. கதிர்வேலு: தலைவரவர்களே, மகப்பேறு பிரிவுக்குக் கட்டடம் கட்டுவதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது 20 படுக்கைகள் கொண்ட வார்டுதான் உள்ளது. அந்தப் பகுதியிலே ஒரு நாளைக்கு ஆயிரம் வெளி நோயாளிகள் வருகிறார்கள். அது மட்டுமல்லாமல் சாலை விபத்துக்களும் அதிகமாக இருப்பதால் படுக்கைகளை அதிகப்படுத்தவும் ஒரு விபத்து வார்டு கட்டுவதற்கும் அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, 20 படுக்கைகள் கொண்ட கட்டடம் கட்ட இப்போதுதான் அனுமதி அளித்திருக்கிறோம். அது கட்டி முடிக்கப்பட்ட பிறகு இது குறித்து பரிசீலனை செய்யலாம்.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1987 நவம்பர் 11]

திரு. மா. கதிர்வேலு : தலைவரவர்களே, ஆப்பரேஷன் தியேட்டர் இருப்பதாலும், அடிக்கடி தொழிற்சாலை விபத்துகள் அதிகமாக நடக்கிற பகுதியாக இருப்பதாலும், வெள்ளையூரிலிருந்து வேலூர் வரையிலுள்ள என். எச். சாலையில் ஏற்படுகிற விபத்துக்குள்ளானவர்கள் அங்கேதான் வரவேண்டியிருப்பதாலும் அந்த மருத்துவமனைக்கு ஒரு 'பிளட் பேங்கும்', ஒரு ஆம்புலன்சும் வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட விவரங்களை அரசு அறியும். அரசுக்கு இருக்கிற நிதி ஆதாரத்தைப் பொறுத்து அதுபற்றி முடிவு செய்யப்படும்.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : தலைவரவர்களே, செங்கற்பட்டு மாவட்ட மருத்துவ மனையில் ஆப்பரேஷன் தியேட்டர் ஒழுங்காகச் செயல்படாத காரணத்தால் அங்கே பயிலுகின்ற மாணவ-மாணவியர்களுடைய கல்விப் பயிற்சி பெரிதும் பாதிக்கப்படுகிறது. அதை நீக்க அரசு முன்வருமா? உரிய நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இப்படிப்பட்ட ஒரு புகார் அரசுக்கு இதுவரையில் வரவில்லை. இப்படிப்பட்ட புகார் ஏதேனும் வந்தால் அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

41—(* வினா எண் 11162) திரு. என். எஸ். வி. சித்தன் மற்றும் திரு. ஆர். கோவிந்தசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பயிற்சி பெறும் நர்சுகளுக்குக் கொடுக்கப்படும் உணவின் அளவையும் உதவித் தொகையையும் அதிகப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு?

பயிற்சி பெறும் நர்சுகளுக்குக் கொடுக்கப்படும் உணவின் அளவையும் உதவித் தொகையையும் அதிகப்படுத்தல்.